## இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகம் - 2017

---

இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் ("நிறுவகம்") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உறுப்பினர் நிதியங்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்கான காலப்பகுதியுடன் தொடர்புடைய வருமானம் மற்றும் செலவினம் மாத்திரமே கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ரூபா 27,750 தொகையான முன்னைய ஆண்டிற்கான நீதிமன்றக் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்கான செலவினமாக கருதப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கருத்தரங்கு, மாநாடுகள் மற்றும் சேவைகளிலிருந்தான வருமானம் ரூபா 1,517,500 ஆக இருந்த போதிலும் இவ்வருமான விடயங்கள் ரூபா 1,563,425 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததால் ரூபா 45,925 வேறுபாடொன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

''நிறுவகத்தின் வங்கிக் கணக்கிற்கு எமது அங்கத்தவர்களால் வைப்பு நோக்கத்தை எமக்கு தெரியப்படுத்தாமல் மேற்கொள்ளப்பட்ட நேரடியான வைப்புக்களை இனங்காண்பதிலுள்ள சிக்கல்களே வேறுபாட்டிற்கான சாதகமான காரணமொன்றாக இருக்க முடியும்'' என நிறுவகத்தின் தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

#### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

கழுத்துப் பட்டிகளின் விற்பனைக்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து உறுப்பினர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 48,000 தொகை இவ் அறிக்கைத் திகதி வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச்சட்டம் | |
| (i) 10(2) ஆம் பிரிவு | சபையின் ஏதாவது கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது சபையின் பத்து உறுப்பினர்கள் காணப்பட வேண்டிய போதிலும் ஒன்பது உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் மாத்திரமே 2017 ஏப்ரல் 03 இல் சபைக் கூட்டமொன்று நடைபெற்றிருந்தது. |
| (ii) 10(9) ஆம் பிரிவு | சபையின் ஒவ்வொரு கூட்டச் செயற்பாட்டிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய குறிப்புக்களை அந்நோக்கத்திற்காக காணப்படுகின்ற புத்தகங்களில் சபை மேற்கொள்ள வேண்டியதுடன் அச் செயற்பாட்டுக் குறிப்புக்கள் தொடர்ந்து வரும் அடுத்த கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற உறுப்பினரால் கையொப்பமிட வேண்டியதுடன் அவ்வாறு கையொப்பமிடப்பட்ட குறிப்புக்கள் அத்தகைய குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட விடயங்களிற்கு தொடக்கமாக காணப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் 03 மற்றும் மே 15 இல் நடைபெற்ற இரண்டு கூட்டத்திற்கான குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியிரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| - நிதிப்பிரமாணம் 454(1) மற்றும் 502(2) | நிறுவகமானது பொருளிருப்பு பதிவேடு மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை முறையாக பேணுவதற்கு தவறியிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 675,695 மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 1,340,202 மிகையொன்றை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 664,507 முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டிற்கான நிர்வாக மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள் குறைவடைந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

**3.2 நிறுவனத்தின் பெறுமதிச் சேர்க்கை**

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் பிரகாரம் ஆனணி வேதனங்கள் மற்றும் பெறுமானத்தேய்வினை கணக்கிற்கு எடுத்ததன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பெறுமதிச் சேர்க்கை ரூபா 1,640,002 ஆக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 970,970 ஆகக் காணப்பட்டது. ஆகையால் பெறுமதிச் சேர்க்கையில் ரூபா 669,032 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. எனினும் 2016 ஆம் ஆண்டின் பெறுமதிச் சேர்க்கையானது 2015 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூபா 1,225,678 உடன் ஒப்பிடும் போது ரூபா 254,708 ஆல் குறைவடைந்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு நிறுவகமானது அதன் உறுப்பினர்களிற்கு புலமைப்பரிசில்கள், கண்காட்சிகள், நிதியுதவிகள், மெடல்கள் மற்றும் ஏனைய பரிசில்களை வழங்குதல் போன்ற அதன் பிரதான நோக்கங்களை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது.

**4.2 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 92,276 மற்றும் ரூபா 131,100 பெறுமதியான முறையே அசைவற்ற மற்றும் மெதுவாக அசையும் இருப்பு உருப்படிகள் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டன.

(ஆ) வங்கி நடைமுறைக் கணக்கிலுள்ள ரூபா 33,479 மீதி 2016 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் இந்நடைமுறைக் கணக்கிலிருந்து வங்கிக் கட்டணங்களாக ரூபா 5,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தலைமை அலுவலக கட்டிடத்தின் ஆரம்ப வேலைகளுக்கு ஏற்பட்ட ரூபா 342,400 தொகையொன்று 2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறை வேலைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்ட காணியின் குத்தகை உடன்படிக்கையினை இரத்துச்செய்து காணியை கையேற்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்திருந்ததுடன் இந்த நோக்கத்திற்காக மற்றுமொரு காணியை கையளித்திருந்தது. ஆகையினால், ஆரம்ப வேலைகளுக்காக ஏற்பட்ட தொகை பயனற்ற செலவினமொன்றாகியிருந்தது.

*இத் தொகையை பதிவழிப்பதற்கான சபை பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு பொருளாளரை சபை வேண்டியிருந்ததென நிறுவகத்தின் தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.*

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு

கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன எதிர்கால செயற்பாடுகளினை எதிர்வுகூறுவதற்கும் எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குகளினை செயற்திறனாக அடைவதற்கான வழிகாட்டல்களினை வழங்குவதற்கும் உதவுகின்றன. இருப்பினும், 2017 ஆம் ஆண்டினை இலக்கிட்டு நிறுவகத்தினால் இவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. செலவினத்தை கணக்கீடு செய்தல் மீதான முறையான கட்டுப்பாடு தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.